137

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௫.	விபவஷூ புரட்டாசிமீ	பகுதி ௯.
Vol 5.	*September & October 1928.*	No. 9.

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(120-ம் பக்கத்தொடர்ச்சி.)

ப்ரபந்நர்கள் ப்ரதிதினம் பாகவத ஸ்ரீபாததீர்த்த நிஷேவணம் செய்யவேணும். அதுவுமன்றி, "[illegible] ஜந்ம [illegible] விசேஷத:" "குரூணாம் திதிநக்ஷத்ரே ஜந்மபேசரவணேபிவா, ஹரிமப்யர்ச்சயேத் பக்த்யாதத் பக்தாம்ச்ச விசேஷத:" என்று சொல்லப்பட்டிருப்பதால் ஆசார்யர்களுடைய தீர்த்த திவஸங்களிலேயும் திருநக்ஷத்ர தினங்களிலேயும் மற்றப்படி ஆழ்வார் முதலான பூர்வாசார்யர்களுடைய தீர்த்த திருநக்ஷத்திர தினங்களிலேயும் பாகவத ஸ்ரீபாததீர்த்த நிஷேவணம் ஆவசியகம். "[illegible] நிஷேவணம்" "ததீய்யாராதநந்தத் பாததீர்த்த நிஷேவணஞ்ச" என்று மற்றொரு இடத்திலிருப்பதாலும், "ஸந்நியோகசிஷ்டந்யாய" "ஸந்நியோகசிஷ்டந்யாய"த்தாலே பாகவதாராதந ஸ்தலங்களிலெல்லாம் ஸ்ரீபாததீர்த்த நிஷேவணமாவசியகம். "[illegible]" "த்ரி: பிபேத் பிந்துவர்ஜிதம்"

என்று திரிராவ்ருத்திக்கும், 'ஸொாவோநஸம்' 'ஸேர்மபாநஸமம்' என்று இரண்டாவ்ருத்திக்கும் ப்ரமாணமிருப்பதாலும், பூர்வாசார்யர்களிடம் இரண்டு ஸம்ப்ரதாயங்களு மிருந்துவந்திருப்பதாலும் யதாஸம்ப்ரதாயம் அநுஷ்டேயம். ஸ்ரீபாததீர்த்த ஸ்வீகாரவிஷயத்தில் ஸ்ரீபாததீர்த்தம் ஸாதிக்கிற ஸ்வாமிகள் உத்தேசியர்களாகையாலே அவர்களுடைய திருவுள்ளத்தை யநுஸரித்து நடப்பது முக்யம். இனி,

ப்ரபந்நனுக்குப் பஞ்சமஹாயஜ்ஞம் கர்த்தவ்யமா? அன்று? என்பது விசாரிக்கப்படும்.

சுருதியில் 'தெவயஜெஜா' 'தேவயஜ்ஞோ' என்று தொடங்கி பஞ்சமஹாயஜ்ஞங்கள் அவசியம் கர்த்தவ்யங்களென்று சொல்லப்பட்டன. "வஞ்சயஜ்ஞாநுஸ்ரு யொமொஹாகு நகுரொதிமுஹாஸு:। தஸ்யநாயம் நவவாஷ: ஸொகொஹவதியஉ:த:। ககூகவா வெவஸ்ஷெவஷு ஹ்ஜஜெதயெஷிஜாயரா:। வஹாயாதெநாவா நெநகாகயொநிம் வூஜஜிதெ" "பஞ்சயஜ்ஞாந்ச்ச யோமோஹாத் நகரோதிக்ருஹாச்ரமீ, தஸ்யநாயம் நசபர: லோகோபவதி தர்மத:, அக்ருத்வாவைசுவதேவந்து புஞ்ஜதேயேத்விஜாதமா:, வ்ருதாதேஹாந்நபாநேநகாகயோநிம் வ்ரஜந்திதே" என்கிற ப்ரமாணங்களாலே கிருஹஸ்தனன ப்ராஹ்மணனுக்கு பஞ்சமஹாயஜ்ஞங்கள் அவசிய கர்த்தவ்யங்களென்றும், பண்ணாவிடில் ப்ரத்யவாய விசேஷ மேற்படுமென்றும் சொல்லப்பட்டன. ஆகையால் பஞ்சமஹாயஜ்ஞங்கள் அவசிய கர்த்தவ்யங்களாமே எனில் அதற்கு ஸமாதானம் சொல்லப்படுகிறது.

பஞ்சமஹாயஜ்ஞங்கள் "வஞ்சஸூநாமுஹஸ்யஸு வதுஷெஹுாயஃ ஸதா। வஷ்நீவெஷிநீ வூஷ்ஹ உஷகும்ஹ உஷஸாஃ। வஹதாஹிவ஧ாஹயநு விஷூ: வஹ்யதெவெஉ஧ஹ உ஧ஹ:। வஹதாஸாம்வாவநாதுஷு வஞ்சயஜ்ஞா: வூகீதி஧தா:" "பஞ்சஸூநாக்ருஹஸ்தஸ்ய வர்த்தந்தேஹ்யரய:, ஸதா கண்டிநீபேஷ்டிநீ சுள்ளீ உதகும்ப உதஸ்கர: ஏதாஸாம்பாவநார்த்தந்து பஞ்சயஜ்ஞா: ப்ரகீர்த்திதா:" என்று கிருஹஸ்தருக்கு

தினந்தோறும் சாகம் தண்டுலம் முதலானவைகளில் கண்டனம், மேதநம் பாகம் முதலானவைகளைச் செய்யவேண்டியிருப்பதால் அவைகள் ஜீவாதிஷ்டிதங்களாகையால் அவற்றை ஹிம்ஸிப்பதால் வரும் பாபத்துக்கு ப்ராயச்சித்தமாக பஞ்சமஹாயஜ்ஞம் விதிக்கப் பட்டன. ப்ரபந்நருக்கு தேஹதாரணம் பரமாத்மஸமாராதந ஸமாப்திப்ரஸாதப்ரதிபத்திரூபமாம். அதாவது பகவதாராதநத்துக்காகவே ஏற்பட்ட ப்ரஸாதத்திற்கு ஆராதகனானவனுடைய தேஹதாரணத்தில் விநியோகம் ஏற்படவேண்டும். அப்படி ஏற்பட்டால் தான் ஆராதனபூர்த்தி. அது எப்படிப்போலே என்னில்? யாகத்தில், "𑌪𑍍𑌰𑌯𑌾𑌜𑌶𑍇𑌷𑍇𑌣 𑌹𑌵𑍀𑌂𑌷𑌿 𑌅𑌭𑌿𑌘𑌾𑌰𑌯𑌤𑌿" "ப்ரயாஜசேஷேண ஹவீம்ஷி அபிகாரயதி" என்று ஹோமத்திலுபயுக்தங்களான ஹவிஸ்ஸுகளை ப்ரயாஜசேஷத்தாலே அபிகாரம் பண்ணவேணும். அப்படிச்செய்யாவிடில் ஹோமபூர்த்தியில்லை: என்பதாக ஒன்றில் விநியுக்தமான பதார்த்தத்திற்கு ஸம்ஸ்காரரூபமாக மற்றொன்று விதிக்கப்படுகிறது போலவும்; சிராத்தத்தில் பித்ருதேவதாராதனத்தில் உபயுக்தமான அந்நத்திற்கு, "𑌇𑌷𑍍𑌟𑍈𑌃 𑌸𑌹 𑌭𑍁𑌜𑍍𑌯𑌤𑌾𑌂" "இஷ்டை: ஸஹபுஜ்யதாம்" என்று இஷ்டபோஜநம் இல்லாவிடில் சிராத்தபூர்த்தி ஏற்படாததுபோலவும் பரமாத்ம ஸமாராதநோபயுக்த த்ரவ்யத்துக்கு ஆராதகனுடைய தேகதாரணத்தில் விநியோகமில்லாதிருக்கும் பக்ஷத்தில் ஆராதனபூர்த்தி இல்லையென்றேற்படுகிறது. இதை உபயுக்தஸம்ஸ்காரரூபையான ப்ரதிபத்தியென்று சொல்லுகிறது. ஆதலால் ப்ரபந்நனை பரமைகாந்திக்கு ஸ்வார்த்தமாக ஒரு ப்ரபத்தியுமில்லாமையால் பகவதாராதனார்த்தமே நித்யங்களான பாகாதிகளேற்படுகிறபடியால் அதிலேற்படுகிற கண்டநீ முதலான பஞ்சஸூநைகள் தண்டுல சாகாதிகளுக்கு ஹிம்ஸாரூபமாகமாட்டாது.

"𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌨𑌾𑌤𑍇 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑍇 𑌗𑍃𑌹𑌮𑌾𑌗𑌤𑍇 । 𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌷𑌧𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌃 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂" "வேதவித்யாவ்ருதஸ்நாதே ச்ரோத்ரியே க்ருஹமாகதே, க்ரந்தந்த்யோஷதய: ஸர்வா: யாஸ்யாம: பரமாம்கதிம்" என்பதனால் ஒரு பாகவதனுடைய ஆராதநத்துக்கு உபயுக்தங்களான சாகம் முதலானவைகள்

உத்தமகெதியை அடையப்போகிறோமென்று ஸந்தோஷிப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதாலும், யாகத்தில் பசு ஹிம்ஸை உதர்க்கத்தில் பசுவிற்கு ஸ்வர்க்கஸாதநமாகையாலே ஹிம்ஸையாகமாட்டாதென் பதுபோலவும் ஹிம்ஸையாகமாட்டாது; ஆகையால் பஞ்சஸூநாக ப்ராய:ச்சித்தரூபமான பஞ்சமஹாயஜ்ஞங்கள் ஆத்மார்த்தமான பாகமுடையவன் விஷயமென்றறியத் தக்கது.

ஆனால், யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதியில் ஆத்மார்த்த பாகத்தை நிஷேதித்து பகவதர்த்த பாகத்தைச்சொல்லி அந்த அதிகாரிக்கு பஞ்சமஹாயஜ்ஞங்களும் விதிக்கப்பட்டனவே என்னில் அந்த அதி காரிக்கு பகவதர்த்தபாகம் ப்ரதாநமாயும் தேஹதாரணம் அப்ரதா நோத்தேசியமாயுமிருக்கும்; அப்படிப்பட்ட அதிகாரிக்கு அந்த வசனம் ஏற்பட்டது.

இந்த அதிகாரி ஸர்வாத்மநாதேஹதாரணத்தை உத்தேசியமாக நினைக்கிறவனல்லன். ஸமாராதந ஸமாப்த்தி ப்ரஸாத ப்ரதிபத்திரூப மாக தேஹதாரணமேற்படுகிறது. ஆகையால் இந்த அதிகாரிக்கு அந்த பாபப்ரசக்தியில்லை.

மேலும் பாகவதத்தில் ஏகாதசஸ்கந்தத்தில், "தேவர்ஷிபூதாப்தந்ருணாம் பித்ரூணாம் நகிங்கரோ நாயம்ருணீ ச ராஜன்" "தேவர்ஷிபூதாப்தந்ருணாம் பித்ருணாம் நகிங்கரோ நாயம்ருணீச ராஜன்" என்கிற சுலோகத்தில் ப்ரபந்நனானவன் பஞ்சமஹா யஜ்ஞதேவதைகளான தெய்வங்கள் ருஷிகள் முதலானவர்களுக்கு கிங்கரனுமன்று; ருணியுமன்று என்று சொல்லியிருக்கிறபடியால் அவருடைய கிங்கர வ்ருத்தியினிபொருட்டும் ருணநிவ்ருத்தியின் பொருட்டும் ஏற்பட்டுச் செய்யப்படுகிற பஞ்சமஹாயஜ்ஞத்தில் இவ னுக்கு அதிகாரமில்லை. பாகவத வ்யாக்யாதாவான ஸ்ரீதரரும் இந்த சுலோக வ்யாக்யானவஸரத்தில் ப்ரபந்நனுக்கு பஞ்சமஹாயஜ்ஞங் கள் வேண்டியதில்லையென்று நிரூபித்திருக்கிறார்.

கீழுதாஹரிக்கப்பட்ட வசனங்களால் நித்யத்வமேற்படுகிறதே யென்னில்? பஞ்சஸூநாகத்திற்கு ப்ரஸக்தியுள்ள அதிகாரி ப்ராய:ச் சித்தம்செய்யாதபக்ஷத்தில் கர்மாநதிகாரத்துக்கு ஹேதுவான தோஷாதிசயத்தைச்சொன்னபடி.

கிஞ்ச, பரமைகாந்தி வ்யதிரிக்த மந்தாதிகாரி விஷயத்தில் நித்யத்வத்தைச்சொல்லியபடி. எப்படி சிவராத்ரி அவைஷ்ணவ விஷயத்தில் நித்யத்வேந கர்த்தவ்யமாயும் வைஷ்ணவ விஷயத்தில அகர்த்தவ்யமாயுமிருக்கிறதோ அப்படியே இதுவுமிருக்கும்.

யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதியின் வ்யாக்யாதாவான விஜ்ஞாநேசுவரர் வைசுவதேவத்தை புருஷஸம்ஸ்காரமாகச் சொல்லியிருக்கிறார்; அந்ந புருஷ ஸம்ஸ்காரமாயும சிலர் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் கேவலாசிரமிவிஷயங்கள். பரமைகாந்திக்கு "மந்நிமித்தம் க்ருதம் பாபமபி தர்மாய கல்பதே" "மந்நிமித்தம் க்ருதம் பாபம் அபி தர்மாயகல்பதே" என்கிற வசனத்காலே கேவல பகவதாராதந உபயுக்தபாகத்தில் பஞ்சஸூநாகம் ஏற்படாமையாலே தத்ப்ராய: சித்தமான வைசுவதேவம் ஸம்ஸ்காரமாகமாட்டாது. பகவதாராதநார்த்தம் கல்பிதமான அந்நத்துக்கும் இது ஸம்ஸ்காரமாகமாட்டாது.

கிஞ்ச, "கிம் கார்யம் வைச்வதேவேந தேவபூஜாபரஸ்ய வை । கிம் வா யஜ்ஞேந தாநேந வைச்வதேவேந பூமிப ॥ வைச்வதேவஸஹஸ்ரேப்யோ விஷ்ணோ: ஸம்ஜ்யாக வைஷ்ணவோத்தம: । விஷ்ணோ: நிவேதிதாந்நந்து பாவநம் லோகபாவநம் ॥ தேநைவ சரிதார்த்தத்வாத் ஸாதுத்வம் நிவேதிதம் । கதம் ப்ராணாஹுதி: குர்யாத் தேவதாந்தரசேஷக: ॥" "கிம் கார்யம் வைசுவதேவேந தேவபூஜாபரஸ்யவை, கிம்வாயஜ்ஞேநதாநேந வைசுவதேவேந பூமிப, வைசுவதேவஸஹஸ்ரோச்சிஷ்டம் நபும்ஜ்யாத் வைஷ்ணவோத்தம:, விஷ்ணோ: நிவேதிதாந்நந்து பாவநம் லோகபாவநம், தேநைவ சரிதார்த்தத்வாத் ஸாதுதத்வம் நிவேதிதம், கதம் ப்ராணாஹுதி: குர்யாத் தேவதாந்தரசேஷக:" என்று பகவதாராதநமே முக்கியமென்றும், வைசுவதேவாதிகள் வேண்டியதில்லையென்றும் ஸ்பஷ்டங்களான வசனங்களிருப்பதால் வைசுவதேவாதிகள் ப்ரபந்நனுக்கு அநாவசியகங்கள்.

சில ஸம்ப்ரதாயஸ்தர்கள், "வைச்வதேவா க்ருதம் பாபம் சிக்ஷார்ஹோ ப்ரஹ்மகோ வ்யபோஹதி । நசிக்ஷணீ க்ருதம் பாபம்

வைஶ்வதேவோ வ்யபோஹதி ||" "வைசுவதேவா க்ருதம் பாபம் பிக்ஷாமேவ வ்யபோஹதி; நபிக்ஷாண க்ருதம் பாபம் வைசுவதேவோவ்யபோஹதி", என்கிற பராசரவசனத்தாலே ஸந்யாஸியினுடைய ஆராதனத்காலே வைசுவதேவாகரணத்தால் ஏற்படும் தோஷம் போய்விடுமென்றிருப்பதால் நித்யமான ஆராதநத்தில் அர்ச்சாரூபியான ஸ்ரீபாஷ்யகாரருடைய ஆராதநம் ஏற்படுகிறபடியால் வைசுவதேவாகரணத்தால் ஏற்படுகிற தோஷம் ஸம்பவிக்க மாட்டாது. ஆனால் ஸ்மிருதிரத்நாகரத்தில் வைசுவதேவம் பண்ணுகிறதற்குமுந்தி ஸந்யாஸி வந்தால் அந்த ஸந்யாஸிக்கு பிக்ஷையே கொடுக்கவேணும். அப்போது வைசுவதேவாகரணத்தால் தோஷம் ஏற்படமாட்டாதென்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் வைசுவதேவாத்ப்ராக் என்று அத்தியாஹாரம் ஏற்படும்; அதைக் காட்டிலும் அத்யாஹாரமில்லாமல் ஏறபடுகிற அர்த்தம் ஸ்வாரஸிகமாகையால் இதுவே உசிதமென்று சொல்லுவர்கள்.

கீழ் நிரூபித்தபடி பஞ்சமஹாயஜ்ஞங்கள் பஞ்சஸூநாக ப்ராய:ச்சித்தமாக ஏற்படுகிறபடியால் பஞ்சஸூநாக ப்ரஸக்தியில்லாமலிருக்கிற பரமைகாந்திக்கு அவைகள் அநாவசியகங்களாகையால் பஞ்சமஹாயஜ்ஞவிதாயக வசனங்கள் பரமேகாந்தி வ்யதிரிக்த விஷயங்கள்.

மேலும் சரணாகதி நிஷ்டர்களுக்கு உத்பந்நாநர்த்தநாசநமான ப்ராய:ச்சித்தம் அநுஷ்டேயமன்று. அதற்கு ப்ரமாணம், "ப்ராயஶ்சித்தாத்மக: கஶ்சித் உத்பந்நாநர்த்தநாஶந: தமம்ஸமநைவ குர்வீத மநீஷீ பூர்வராஶிவத்" "ப்ராய:ச்சித்தாத்மக: க:ச்சித் உத்பந்நாநர்த்தநாசந:, தமம்சம்நைவ குர்வீதமநீஷீ பூர்வராசிவத்" என்பதால் உத்பந்நாநர்த்த நாசநமான கார்யம் கர்த்தவ்யமன்று என்று ஏற்படுகிறது.

கிஞ்ச, "க்ருதாஸ்ஸமஸ்தா யஜ்ஞாஶ்ச தாநாநி சதபாம்ஸி ச | ப்ராயஶ்சித்தமஶேஷேண நித்யமர்ச்சயதா ஹரிம்" "க்ருதாஸ்ஸமஸ்தா யஜ்ஞாச்ச தாநாநிசதபாம்ஸிச, ப்ராய:ச்சித்தமசேஷேண நித்யமர்ச்சயதா ஹரிம்" என்று நித்யமான பகவதாராதநத்தாலேயே பஞ்சமஹாயஜ்ஞங்கள் பண்ணினதாக ஏற்படுகிறபடியாலும் அவை அநாவசியகம்.

வஸ்துதஸ்து பஞ்சமஹாயஜ்ஞங்கள், “யத்பலம் ஸோமயாகேந ப்ராப்நோதி தநவாந் த்விஜ:। ஸம்யக் பஞ்சமஹாயஜ்ஞைர் தரித்ரஸ் ததவாப்நுயாத்” “யத்பலம் ஸோமயாகேந ப்ராப்நோதி தநவாந் த்விஜ:, ஸம்யக் பஞ்சமஹாயஜ்ஞை: தரித்ரஸ்ததவாப்நுயாத்” என்று பிருகுமஹருஷியும், “ய ஏதாந் அவ்யக்ரம் யதோபதேசம் குருதே நித்யம் தஸ்ய ஸ்வர்க்க: புஷ்டிச்சேதி” “யவதாந் அவ்யக்ரம் யதோபதேசம் குருதே நித்யம் தஸ்யஸ்வர்க்க: புஷ்டிச்சேதி” என்று ஆபஸ்தம்பரும் சொல்லியிருக்கிறபடி பஞ்சமஹாயஜ்ஞகரணத்தில் ஸ்வர்க்காதிபல மேற்படுகிறபடியால் அந்த பஞ்சமஹாயஜ்ஞங்கள் காம்யகர்மங்களாகவும் ஏற்படுகின்றன. காம்ய கர்மாக்கள் பரமைகாந்திக்கு த்யாஜ்யங்களாகையால் அதனாலும் அநநுஷ்டேயங்கள். ஆனால் அகரணே ப்ரத்யவாயாவஹங்களான வசனங்களுக்கு கெதி யென்னென்றால் அது ப்ரபந்நேதரவிஷய மென்று பூர்வமே ஸமாதாநம் சொல்லப்பட்டது.

தொடரும்.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(88-ம் பக்கத்தொடர்ச்சி.)

தர்ம:- க்ரோத: ஸுதுர்ஜய: சத்ரு: லோபோ வ்யாதி ரநந்தக:।
ஸர்வபூதஹித: ஸாதுரஸாதுர்நிர்த்தய: ஸ்ம்ருத:॥

க்ரோத: ஸுதுர்ஜய சத்ரு: லோபோவ்யாதி ரநந்தக:
ஸர்வபூதஹித: ஸாதுரஸாதுர்நிர்த்தய: ஸ்ம்ருத:

(இ-ள்.) (91) வெகுளியே வெல்லமுடியாத பகையாம்,

---

(91) “நகையுமுவகையுங்கொல்லும் சினத்திற், பகையுமுளவோபிற” அருளின் கார்யமாகிய முகத்தின்கண் நகையையும், மனத்தின் கண்ணுள்ள மகிழ்ச்சியும் அழித்துக்கொண்டு தோன்றுகின்ற கோபத்தினுமிக்கதோர்

(92) லோபமே முடிவற்ற நோயாம். (93) எல்லாவுயிர்க்கும் நன்மை செய்பவனே ஸாதுவாம். (94) தயையில்லாதவனே அஸாதுவாம்; எ-ம்.

(உரு) 𑌯𑌕𑍍𑌷𑌃:- 𑌕𑍋 𑌮𑍋𑌹𑌃 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌕𑌶𑍍𑌚 𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃।
𑌕𑌿𑌮𑌾𑌲𑌸𑍍𑌯𑌞𑍍𑌚 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌕𑌶𑍍𑌚 𑌶𑍋𑌕𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃॥

கோமோஹ: ப்ரோச்யதேராஜந் கச்சமாந: ப்ரகீர்த்தித:
கிமாலஸ்யஞ்ச விஜ்ஞேயம் கச்சசோக: ப்ரகீர்த்தித:.

(இ-ள்.) அரசனே! மோஹமெனப்படுவதெது? மானமாவது யாது? ஆலஸ்யமெனப்படுவது எது? சோகமென்று சொல்லப்படுவது யாது? எ-ம்.

வெல்லற்கரிய பகை பிறிதொன்றுமில்லை என்று சொல்லப்பட்டுளதை நோக்குமிடத்து வெகுளியே உட்பகையாய் நின்று அருள் முதலிய நற்குணங்களை அடியோடழிக்கும் கொடுமையுடையதாம் என்று விளங்குகிறதினால் இங்கு 'வெகுளியே வெல்லமுடியாத பகையாம்' என்று சொல்லப்பட்டது.

(92) லோபகுணமொன்றே அறப்பயனைப்பெறாது இழக்கச்செய்து, பாபத்திற்காளாக்கிப் பிறப்பிறப்பென்னும் பெருங்கடலில் வீழ்த்துமாதலால் 'லோபமே முடிவற்ற வியாதியாம்' என்று சொல்லப்பட்டது.

(93) "𑌸𑌾𑌧𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌸𑌾𑌧𑌵𑌃" "ஸாத்நோதி பரமகாய மிதிஸாது" என்ற வ்யுத்பத்தியினல் கைமாறுகருதாது பிறன்காரியத்தைத் தன் கார்யம்போற்செய்துமுடிப்பவனே ஸாதுவாவானென்பது அறியக்கிடக்கிறதினால் "எல்லாவுயிர்க்கும் நன்மை செய்பவனே ஸாதுவாம்" என்றுரைக்கப்பட்டது.

(94) முன்னுரைக்கப்பட்ட ஸாதுவின் தன்மையில்லாதவன் தயையற்றவனுவானென்பது ஒருதலையாதலான் "தயையில்லாதவனே அஸாதுவாம்" என்றுரைக்கப்பட்டது. இதனல் அருளுடையவன் வெகுளி லோபம் தயையின்மை முதலியவைகளை ஒழித்து எல்லாவுயிர்க்கும் நன்மை செய்வதில் கருத்துடையவனுயிருத்தல்வேண்டுமென்பது பெறப்படும்.

(உரு) இனி, உரைக்கப்பெறும் மூன்று சுலோகங்களால் மோஹம் முதலியவற்றின் இலக்கணஞ் சொல்லப்படுகிறது.

தர்ம:- ஜொஹொஹி யஃ உடீக்ஷவம் ஊநஸ்வாத்ராஹி ஊநிதா।
யஃ நிஷ்க்ரியதாலஸ்யம் ஸொகஸ்த்வஜ்ஞாந ஊச்யதே॥

மோஹோஹி தர்ம மூடத்வம் மாநஸ்த்வாத்மாபிமானிதா
தர்ம நிஷ்க்ரியதாலஸ்யம் சோகஸ்த்வஜ்ஞாந முச்யதே.

(இ-ள்.) 95 தர்மத்தை யறியாதிருத்தலே மோஹமாம். (96) மானமாவது தானென்று அஹங்கரிப்பதாம். (97) தர்மத்தைச் செய்யாதிருப்பதே ஆலஸ்யமாம். (98) அறிவின்மையே சோகமாம்; எ-ம்.

---

(95) "மனத்துக்கண் மாசிலனாதலனைத்தான்" என்று மனக்குற்றமின்மையே அறமாகச் சொல்லப்பட்டது. இதற்கு விரோதமாக "மூஹ, வெவிசித்யெ" மொஹநம் மொஹஃ "முஹ, வைசித்யே" மோஹநம் மோஹ: என்றபடி விரூபமான (விருத்தமான) மனதுடைமையே மோஹமாமென்றறியத் தக்கது. இந்த மனதுடைமையே தர்மத்தை யறியாதிருத்தற்குக் காரணமாம். இங்குக் காரணத்தைக் காரியமாக உபசரித்துத் "தர்மத்தையறியாதிருத்தலே மோஹமாம்" என்று சொல்லப்பட்டது.

(96) "ப்ராணம்வாவி வரித்யஜ்ய ஊநமெவாவிரக்ஷதா" "ப்ராணம்வாபி பரித்யஜ்ய மாநமேவாபிரக்ஷது" (ப்ராணனை விட்டாவது மானத்தைக்காப்பாற்ற வேண்டும்) என்று சொல்லப்பட்டமானம் மர்யாதையின்பாற்படும். இங்குரைக்கப்பட்டமானம் அஹங்காரவடிவமாயிருப்பதொன்றாம். இந்த அஹங்காரமும் ஆத்மஜ்ஞாநிக்கு இருக்கலாகாதென்பது கருத்து.

(97) நலஸதீத்யலஸஃ தஸ்யஹாவஃ ஆலஸ்யம்" "நலஸதீத்யலஸ: தஸ்யபாவ: ஆலஸ்யம்" என்ற வ்யுத்பத்தியினால் புகழில்லாத (ப்ரகாசமில்லாத)வனாயிருக்குந்தன்மை ஆலஸ்யமாம். இது சோம்பல் என்று சொல்லப்படும். இந்தச்சோம்பல், தர்மத்தில் முயலவொட்டாமல் வாழ்நாளைவாளாகழிக்கும்படிசெய்துவிடுமாதலால் இதையும் ஆத்மஜ்ஞாநியாயிருப்பவன் அகற்றிவிடவேண்டுமென்பது கருத்து.

(98) ஒருவற்கு அறிவுடைமை காரணமாக இன்பமும், அஃதின்மை காரணமாகச் சோகமுமுண்டாகும். சோகம் அறிவின்மையின் கார்யமாம். இங்குக்கார்யத்தைக்காரணமாக உபசரித்து "சோகமென்று சொல்லப்படுவது அறிவின்மையாம்" என்று சொல்லப்பட்டது.

(௨௯) யக்ஷ:- 𑌕𑌿𑌂𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌂 𑌋𑌷𑌿𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌧𑍈𑌰𑍍𑌯𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌂 ।

𑌸𑍍𑌨𑌾𑌨𑌞𑍍𑌚 𑌕𑌿𑌂𑌪𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌦𑌾𑌨𑌞𑍍𑌚 𑌕𑌿𑌮𑌿𑌹𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

கிம்ஸ்தைர்யம் ருஷிபி: ப்ரோக்தம் கிஞ்சதைர்ய முதாஹ்ருதம்
ஸ்நாநஞ்ச கிம்பரம் ப்ரோக்தம் தாநஞ்ச கிமிஹோச்யதே.

(இ-ள்.) உறுதியென்று ருஷிகளால் கூறப்படுவதெது? தைர்யமென்பது யாது? சிறந்த ஸ்நாநம் என்று சொல்லப்படுவதெது? தானமெனப்படுவதி யாது? எ-ம்.

தர்ம:- 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇 𑌸𑍍𑌥𑌿𑌰𑌤𑌾 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌂 𑌧𑍈𑌰𑍍𑌯𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃

𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌮𑌨𑍋𑌮𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 𑌦𑌾𑌨𑌂𑌵𑍈 𑌭𑍂𑌤𑌰𑌕𑍍𑌷𑌣𑌂 ॥

ஸ்வதர்மே ஸ்திரா ஸ்தைர்யம் தைர்யமிந்திரிய நிக்ரஹ:,
ஸ்நாநம் மனோமலத்யாக: தாநம்வை பூதரக்ஷணம்.

(இ-ள்) 99 தத்தமக்குரிய தர்மத்தின்கண் நிலைபெற்று நிற்பதே உறுதியாம். (100) தைர்யமாவது புலன்களை யடக்குதலாம். (101) சிறந்த ஸ்நானமாவது மனமாசுசற்றலாம். தானமாவது மன்னுயிரைக்காப்பதாம்; எ-ம்

---

(99) சாஸ்திரத்தால் விதிக்கப்பட்ட தத்தம் வருணத்திற்கும், நிலைக்கும் ஏற்றவாறு தவறாது நின்றொழுகுவதே உறுதியாம். இவ்வுறுதி ஒருவனுக்கு நிலைபெறவேண்டுமானால் மனத்தின்கண்ணுள்ள சஞ்சலத்தன்மையை ஒழித்தல்வேண்டும்.

(100) பட்டிமாடு அடங்காது மேய்ந்துதிரிவதுபோல சுவை ஒளி ஊறு ஓசைநாற்றமென்கிற ஐந்துபுலன்களை மேய்ந்துதிரிகிற இந்திரியங்களை யடக்குவதுதான் தைர்யமாகும். இதுவும் மனத்திண்மை இருந்தாலன்றிச் சித்தியாதென்று அறியத்தக்கது.

(101) "𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌯 𑌨𑌯𑍇𑌤𑌿 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂" "ஸ்நாத்ய நயேதி ஸ்நாநம்" என்ற வ்யுத்பத்தியினால் ஸ்நாநம் என்ற பதத்திற்குத் தூய்மைக்குக்காரணமாயிருப்பதெதுவோ அதுவே பொருளாமென்பது பெறப்படும். சிறந்த ஸ்நாநமெனவே சிறவாத ஸ்நாநமொன்றுண்டென்பது விளக்கும். அஃதாவது:—தேகத்தின் அழுக்கொழியச்செய்கிற ஸ்நாநமாம். ஆத்மஜ்ஞாநியாயிருப்பவனுக்கு இதனால் ஒரு பிரயோஜனமில்லை. அகத்தூய்மையே முக்யமாக விருத்தல்வேண்டுமென்பது கருத்து.

(உள) யக்ஷ:- 𑌕𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 𑌪𑍁𑌮𑌾𑌞𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑌃 𑌕𑌶𑍍𑌚 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑍋 𑌮𑍂𑌰𑍍𑌖𑌃 𑌕𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍋 𑌮𑌤𑍍𑌸𑌰 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

க: பண்டித: புமாங்ஞேயோ: நாஸ்திக: கச்ச உச்யதே
கோமூர்க்க: சச்சகாம: ஸ்யாத்கோமத்ஸர இதிஸ்ம்ருத:

(இ-ள்.) பண்டிதனுவான் யாவன்? நாஸ்திகனென்று சொல்லப் படுமவன் யாவன்? மூடனுவான் எவன்? காமமாவதியாது? மத்ஸர மாவது யாது? எ-ம்.

தர்ம:- 𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑍋 𑌜𑍍𑌞𑍇𑌯𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍋 𑌮𑍂𑌰𑍍𑌖 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑌾𑌮𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌹𑍇𑌤𑍁𑌶𑍍𑌚 𑌹𑍃𑌤𑍍𑌤𑌾𑌪𑍋 𑌮𑌤𑍍𑌸𑌰𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

தர்மஜ்ஞ பண்டிதோ ஞேயோ நாஸ்திகோ மூர்க்க உச்யதே
காம: ஸம்ஸார ஹேதுச்ச ஹ்ருத்தாபோ மத்ஸர: ஸ்ம்ருத:

(இ-ள்.) (103) தர்மத்தை யறிந்தவனே பண்டிதனுவான். (104, 105) மூடனே நாஸ்திகனுவான். (106) பிறவிக்குக்காரண

---

(102) தன்பால் ஒருவன்வந்து தன்னிடுக்கணை முன்னிட்டு இரந்து நின்றகாலத்து அவனது துன்பமொழியுமாறு கொடுத்துக்காப்பதே சிறந்த தானமாகுமென்றறியத்தக்கது.

(103) பண்டிதன்—எல்லாமறிந்தவன். தர்மத்தையறிதலாவது தர்ம ஸ்வரூபியான ஸர்வேசுவரனை யறிதலாம். எல்லாவஸ்துக்களிலும் நீக்கமற் நிறைந்துநின்று அவ்வவ்வஸ்துவின் ரக்ஷணுதிகளைச்செய்கின்ற ஸர்வேசு வரன் ஒருவனையறியவே எல்லாமறிந்ததாமாதலால் இங்குத் 'தர்மத்தை யறிந்தவனே பண்டிதனுவான்' என்று சொல்லப்பட்டது.

(104, 105) தெய்வமில்லை; புண்ணியமில்லை; பாபமில்லை; பரலோக மில்லை என்று சொல்பவன் நாஸ்திகனுவான். மூடனென்று சொல்லப்படு மவனும் இவனேயாவன். உலகத்தில் மக்களாய்ப்பிறந்தவருள் பலர் ஒரு சிலர்க்கு அடிமையாயிருந்து துக்கிக்கவும், ஒருசிலர் எஜமானராகவிருந்து சுகமுற்றிருக்கவும், கண்கூடாகக் காண்கின்றேமன்றே! இதனுல் புண்ய பாபங்களுண்டென்பதைத் தெளிவாக வறியலாம். இவ்வுணர்ச்சியில்லாதவர் கள் மூடராவர். இங்கு இரண்டுவினுகட்கு ஒரேவிடையாக 'நாஸ்திகனுவான் மூடனும்' என்று சொல்லப்பட்டது.

(106) "அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவாஅப் பிறப்பீனும்வித்து" மிருந்த ஆசையானது, எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும்

மாவது காமமாம். (107) மனக்கொதிப்பே மத்ஸரமெனப்படும்.

(உஅ) யக்ஷ:- 𑌕𑍋𑌹𑌂𑌕𑌾𑌰 𑌇𑌤𑌿𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌕𑌶𑍍𑌚 𑌦𑌂𑌭 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌤𑌃।
𑌕𑌿𑌂𑌦𑍈𑌵𑌂 𑌪𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌿𑌂𑌤𑌤𑍍𑌪𑍈𑌶𑍁𑌨𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇॥

கோஹங்கார இதிப்ரோக்த: கச்ச தம்ப ப்ரகீர்த்தித:
கிம்தைவம் பரம் ப்ரோக்தம் கிந்தத்பை சூந்ய முச்யதே.

(இ-ள்.) அஹங்காரமென்பதெது? டம்பம் என்பது யாது? நல்லவூழ் என்பது எது? குறளை என்பதென்ன? எ-ம்.

தர்ம:- 𑌮𑌹𑌾𑌜𑍍𑌞𑌾𑌨 𑌮𑌹𑌂𑌕𑌾𑌰𑍋 𑌦𑌂𑌭𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌧𑍍𑌵𑌜𑌾𑌶𑍍𑌰𑌯𑌃।
𑌦𑍈𑌵𑌂 𑌦𑌾𑌨𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍈𑌶𑍁𑌨𑍍𑌯𑌂 𑌪𑌰𑌦𑍂𑌷𑌣𑌂॥

மஹாஜ்ஞாந மஹங்காரோ தம்போ தர்மோ த்வஜாச்ரய:
தைவம் தாநபலம் ப்ரோக்தம் பைசூந்யம் பரதூஷணம்.

(இ-ள்.) (108) முற்றுமறியாமையே அஹங்காரமாம். (109)

கெடாது வருகின்ற பிறப்பை விளைவிக்கின்றவித்தாம்; என்றுசொல்லப்பட்டுளதால் இங்குப் "பிறவிக்குக்காரணமாவது காமமாம்" என்றுரைக்கப்பட்டது.

(107) "𑌪𑌰𑌦𑍈𑌨𑍍𑌯𑌾𑌤𑍀𑌤𑌿 𑌮𑌤𑍍𑌸𑌰𑌃" "மதேநஸரதீதி மத்ஸர:" (பிறர் துக்கத்தைக் கண்டவிடத்து ஸந்தோஷத்தோடு திரிபவன்) என்பதனால் பிறராக்கம் பொறாமையே மத்ஸரமாமென்பது பெறப்படும். இக்குணம் ஒருவனிடத்தில் குடிகொண்டிருக்குமாகில், அது அவனது மனத்தைக்கொதிக்கும்படிசெய்யும். இங்குரைக்கப்பட்ட மோஹம் முதலியவைகள் மக்களுக்குப் பெருந்துன்பத்தை விளைவிக்குமியல்பினையுடையனவாதலால் இவற்றை அடியோடுகளைந்துவிடுவதில் முயலவேண்டுமென்பது பெறப்படும்.

(உஅ) இனி, அஹங்கார முதலியவற்றின் இலக்கண முரைக்கப்படுகிறது.

(108) அஹங்காரமாவது யானென்னுஞ் செருக்காம். அறியாமையின் காரணமாக விளைகின்றவற்றுள் இது சிறந்ததாதலால் இங்கு, "முற்றுமறியாமையே அஹங்காரமாம்" என்று சொல்லப்பட்டது.

(109) உலகினர் புகழ்தற்காகச் செய்யும் தர்மம் பயனற்றதாமென்பது கருத்து.

கொடி கட்டிச்செய்யும் தர்மமே டம்பமாம். (110) தர்னத்தின் பயனே நல்லூழாம். (111) பிறரைத்தூஷிப்பதே குறளையாம்; எ-று.

தொடரும்.

ஸ்ரீ:
ஸ்ரீவரமங்கை சகாயம்.

வானமாமலை ஸ்ரீவைஷ்ணவர் சங்கம்.

ஸ்ரீவரமங்கலநகரான வானமாமலையிலுள்ள ஸ்ரீவைஷ்ணவ இளைஞர்கள் ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் கொள்கைகளை யுணர்ந்தொழுகியுஜ்ஜீவிக்குமாறு 29—7—28 ஞாயிற்றுக்கிழமையன்று ஓர் சங்கம கூட்டப்பட்டிருக்கிறது இச்சங்கம் பிரதி ஞாயிற்றுக் கிழமையிலும் கூடப்படும். ஆண்டு, ஸ்ரீவைஷ்ணவசித்தாந்தக் கொள்கைகள் யதாக்ரமம் தெரிந்துகொள்ளுமாறு ஸ்தலத்துள்ள பெரியார்களால் உபந்யாசங்கள் செய்யப்படும்.

சென்ற ஞாயிறன்று ஸ்தலவித்வான் நியாயசிரோன்மணி ஸ்ரீ உ. வே. கோபாலய்யங்கார்ஸ்வாமி சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதியாகவும், ஸ்ரீ. உப. வே. திருமலை அய்யங்கார், ரெ. கிருஷ்ணய்யங்கார் என்ற இவர்கள் காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் சங்கத்தின் விதிகள் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

---

(110) நற்கர்மங்களுட்சிறந்த தானத்தின்பயனே நல்லூழாய் நின்று நன்மையை அடைவிக்குமென்றறியத்தக்கது.

(111) புறங்கூறல் கேட்டிற்கேதுவாமாதலால் இச்செயலையும்செய்யலாகாதென்பது கருத்து.

இதனல், அஹங்காரம் டம்பம் புறங்கூறல் என்ற இம்மூன்றையுமொழித்து ஆஸ்திகபுத்தியுடையனாய்ப் பிறிதொருபயனைக்கருதாது தருமத்தைச்செய்து வாழவேண்டுமென்பது பெறப்படும்.

பின்னர், ஸ்ரீமான் கோபாலய்யங்கார் சங்கத்தின் முன்னேற்றத்தை முன்னிட்டு சபையோர்களுக்கு முக்யமாயிருக்கவேண்டிய (சகல வைஷ்ணவர்களுக்கும் இருக்கவேண்டிய) குணங்களாவன பாரதந்த்ர்யமும், (தனக்குத்தான் உரியனல்லன் என்னும் புத்தியும்) பரதுக்காஸஹிஷ்ணுத்வமும் (பிறருடைய துக்கத்தைக்காண சகியாமையும்) என்ற இவைகளாம்; என்றுசொல்லி முடிவில் இந்த ஸபையோர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவர்களது ஸம்பந்தம் என்றும் மாறாமலிருப்பதற்கு,

समुद्धृतमदामानाः चरमोपायनिष्ठिताः
समस्तपरमार्थज्ञाः अर्थकामानपेक्षिणः ।
निखिलजनसौहार्दाः निर्जितक्रोधलोभकाः
वरवरमुनिभृत्याः स्युर्मे नित्ययोगिनः ॥

[மதம், மானம் இவைகளை வேரோடு அறுத்தவர்களாயும், சரமோபாயத்தில் (ஆசார்யநிஷ்டையில்) ஊன்றினவர்களாயும், மேலான அர்த்த பஞ்சகஞானத்தை யுணர்ந்தவர்களாயும், பொருளையும் சிற்றின்பத்தையும் விரும்பாதவர்களாயும், சகல ஜனங்களிடத்திலும் அன்புடையவர்களாயும், கோபம், பேராசை இவைகளை வென்றவர்களாயுமிருக்கிற மணவாளமாமுனிகளின் திருவடிசம்பந்திகளான ஸ்ரீவைஷ்ணவர்களோடு எனக்கு நித்யசம்பந்தம் கிடைக்கட்டும்] என்ற இந்த சுலோகார்த்தத்தை எல்லோரும் அநுசந்திக்கும்படி சொல்லி இந்த சபை நித்யமாக நடந்துவருமாறு ஸர்வேச்வரன் கிருபை பண்ணவேண்டுமென்ற பிரார்த்தனையுடன் சபையை முடிவுக்குக்கொண்டுவந்தார். பின்னர்ச் சந்தனமும் தாம்பூலமும் வழங்கப்பட்டன.

R. KRISHNAIYANGAR,
Secretary.

1—8—28.

ஸ்ரீ:

மதிப்புரை.

கம்பராமாயணம் அயோத்தியாகாண்ட உரை:-இவ்வுரை நூலாசிரியர், ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்ய ரென்பார். பண்டைக்காலத்து உரையாசிரியரைப்போல இவரும் இருமொழியினும் வல்லுநராகவே விளங்குகின்றாரென்பது இவருரையாற்புலனாகிறது. பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு மூலபாடங்களை நன்றாகப் பரிசோதித்து உரையெழுதி வெளியிட்ட இவரது நன்முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதே. பதவுரையும், அவ்வுரையைப் பல்லாற்றானும் விளக்கிக்காட்டுகின்ற விரிவுரையும், இன்றியமையாத இலக்கணக்குறிப்பும், கதைக் குறிப்பும், முரண்படுகிற இடங்களில் முதனூலோடு பொருந்தவுரைக்கும் உரைநயமும், அரியசொற்பிரயோகங்கட்குத் தக்கமேற்கோளெடுத்துரைக்கும் திறனும், சிறந்த வடசொல்லுக்கு வ்யுத்பத்திமுன்னாகப் பொருளுரைக்கும் நுணுக்கமும் இந்நூலில் பொதிந்துகிடக்கின்றன. மேலும், இக்காண்டத்துக் கடவுள்வாழ்த்துச் செய்யுட்குப் பின்னர் "மன்னனே யவனியை" என்றும், "நீங்கிழையிராவணன்" என்றும் வருவனமுதலிய அரிய பல செய்யுட்கள் இந்நூலில் நூதனமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இக்காண்டத்திறுதிப்படலம் "கிளைகண்டு நீங்குபடல"மென்று பலராலும் வழங்கப்பட்டும், எழுதப்பட்டுமுள்ளனவென்பதை யாவருமறிவர். இங்கு இப்படலத்திற்குத் "திருவடிசூட்டுபடலம்" என்று குறிப்பிட்டு "திருவடியை இரந்து பெற்று முடிக்கணியாகச் சூட்டிக்கொண்டு சென்றதைத்தெரிவிக்கும் படலம்" என்றேனும், "திருவடிக்கு இராச்சியத்தைச் சூட்டியதை (ப்ரதுகர்பட்டாபிஷேகம் செய்ததைத்) தெரிவிக்கும் படலம்" என்றேனும் இதற்குப் பொருள்கொள்ளத்தக்கது என்று தக்க சமாதானம் காட்டி உரைக்கப்பெற்றதும் கொண்டாடத்தக்கதே.

இஃதொருபுறமிருக்க, இக்காண்டத்தின் பிண்டப்பொருளுரைக்க வந்தவிடத்தில் "இக்காண்டத்தில் அவர்களால் (இராமாயண புருஷர்களால்) அநுஷ்டிக்கப்பட்ட பித்ருவசனபரிபாலன முதலிய

சாமான்ய தர்மங்களும், பகவத்சேஷத்வம், பாரதந்த்ர்யம், பாகவ தாபிமானநிஷ்டை முதலிய விசேஷதர்மங்களும் சொல்லப்படுகின் றன" என்றும், "வானின்றிழிந்து" என்ற கடவுள்வாழ்த்துச் செய்யுள் விசேடவுரையில் "பாலகாண்டத்தில் ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களைச் சொல்லுகிற முறையாலே மூன்று கவிகளால் கடவுள்வாழ்த்துக்கூறி, அயோத்தியாகாண்டத்தின் இம்முதற்கவி யால், அவன் தன்மையைக் காட்டுமுகத்தாலே இக்காப்பியத்தலை வனாகிய ஸ்ரீராமபிரான் ஜகச்சரீரனான ஸர்வேசுவர னென்கிறார்" என்றும், 'வான்' என்ற பதத்திற்குச் 'சுராரறிவருநிலை' என்ற திரு வாய்மொழியில் 'வான்' என்ற சொல்லிற்கு உரைக்கப்பெற்ற பொருளையுட்கொண்டு மூலப்ரகிருதியென்றும், 'ஊனுமுயிரு முணர் வும்போல் உள்ளும் புறனும் உளனென்ப' என்பதற்குத் "திடவிசும் பெரிவளி" என்ற திருவாய்மொழியையுட்கொண்டு பொருள்கொள் ளத்தக்கது என்றும், இன்னும் இக்கடவுள் வாழ்த்தில் இன்னின்ன பதத்தால் ஸ்ரீராமாயணத்தின் ஏழு காண்டங்களின் வரலாறுகள் புலனாகின்றன என்றும் உரைக்கப்பெற்றுள்ளனவற்றை ஆராயு மிடத்து இந்நூலாசிரியர் ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலும் சீரியகூரிய ஜ்ஞானவிசேஷமுடையவரென்பது விளங்குகின்றது. இதுவரையில் வெளிவந்துள்ள பலவுரை நூல்களில் இவ்வுரை நூலே சாலச்சிறந்த தென்பது தெற்றென்றறியக்கிடக்கிறது. ஆகலால் கம்பராமா யணத்தைப்பயிலவிரும்புவோரனைவரும் இந்நூலைப் போற்றுவதற் குக்கடமைப்பட்டவராவார். வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

விலாசம்:—

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர்,

17, தெளிசிங்கப்பெருமாள்கோவில் தெரு,

திருவல்லிக்கேணி,

சென்னை.